**<u>VAC No. 2 / 2025</u>**

**PW17 – Thiru. Venkatesan**

**06.02.2026**

**(Accused is present)**

<u>சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய தொடர்ந்து செய்ய அனுமதிக்கப்படுகிறார்.</u>

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>**

நேரம் 12.50 மணி

இந்த வழக்கின் புலன்விசாரணையை முடித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்வதற்கு முன்பு எதிரியை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால் எதிரியை விசாரணை செய்தேன் ஆனால் வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. எதிரியின் வாக்குமூலம் எதிரிக்கு சாதகமாகவும், அரசு தரப்பிற்கு பாதகமாகவும் இருக்கும் என்பதால் அவருடைய வாக்குமூலத்தை பதிவு செய்யாமல் விட்டுவிட்டேன் என்றால் சரியல்ல. 2002–2003 ல் எதிரியால் கட்டப்பட்ட வீடு சம்பந்தமாக மதிப்பீட்டை பொதுப்பணித்துறை அதிகாரிகளை விசாரித்தேனா என்றால் எனக்கு முன்பு புலன் விசாரணை செய்த ஆய்வாளர் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். நான் அந்த வாக்குமூலத்தை படித்து பார்த்து பரிசீலனை செய்தேனா என்றால் செய்தேன். அ.சா.11 பொதுப்பணித்துறை பொறியாளர் திரு. ராஜ்குமார் கொடுத்த வீட்டின் சொத்து மதிப்பினை பார்த்தேனா என்றால் நான் பார்த்தேன். இந்த வழக்கில் எதிரியின் வீட்டை அ.சா.11, 2002–2003 ல் கட்டிய காலதருணத்தில் அரசால் நிர்ணயிக்கப்பட்ட விலைப்பட்டியலை ஆஜர் செய்தாரா என்றால் இல்லை. மேற்படி விலைப்பட்டியில் உள்ள விலை குறித்து அவரை விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் விலைப்பட்டியல் இல்லை. ஆகவே Local Market Rate வைத்து நிர்ணயம் செய்ததாக அ.சா.11 வாக்குமூலம் கொடுத்துள்ளார். மேற்படி வீட்டின் விலைமதிப்பு விலைப்பட்டியலை வைத்து சரியாக நிர்ணயம் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரியின் பெரியம்மா கலாராணி, பெரியப்பா டேனியல் மற்றும் தாய்மாமன் பொன்னுசாமி ஆகியோரை இந்த வழக்கில் சாட்சியாக நான் விசாரித்தேனா என்றால் இல்லை.

இந்த வழக்கில் இறுதி அறிக்கை தாக்கல் செய்வதற்கு முன்பு அ.சா.3 முருகேசனின் குவிமுச 161 வாக்குமூலத்தை படித்து பார்த்தேனா என்றால் படித்தேன். இந்த வழக்கில் இறுதி அறிக்கை தாக்கல் செய்வதற்கு முன்பு எதிரியின் மீது அரசு நன்னடத்தை விதி மீறியதற்காக எதுவும் நடவடிக்கை எடுக்க என்னால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதா என்றால் நான் பரிந்துரைசெய்தேன். எதிரி முன் அனுமதியில்லாமல் எதிரி தன் பெயரிலும், தன் மகன், மனைவி பெயரிலும் அவர்களுக்கு வருமானமில்லாமல் சொத்துக்கள் வாங்கியுள்ளதால் அதன்மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்ககோரி பரிந்துரை செய்தேன். வழக்கு காலகட்டத்தில் எதிரியின் மகன் என்ன பணி செய்தார்கள் என்றும் எவ்வளவு வருமானம் அவர்களுக்கு வந்தது என்றும் நான் விசாரணை செய்தேனா என்றால் எனக்கு முன்பிருந்த ஆய்வாளர் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பொதுவாக Check period ல் அரசு ஊழியர் வங்கியிலோ, அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனங்களிடமிருந்தோ, தனிநபர்களிடமிருந்து போதுமான ஆதாரத்துடன் கடன் பெற்றிருந்தால் அந்த விவரத்தை அட்டவணை 3 ல் காட்டப்பட வேண்டும் என்றால் அதற்கான ஆவணங்கள் சமர்பிக்கப்பட்டால் பரிசீலிக்கப்படும். இந்த வழக்கில் எதிரியின் உறவினர்கள் வீடுகட்டுவதற்கு உதவி செய்தார்கள் என்றாலும் அதை நான் பரிசீலனை செய்யாமல் எதிரி மீது மிகைபடுத்தி வருமானத்திற்கு மீறி சொத்து சேர்த்ததாக என்னால் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கு நான் கொடுத்த இறுதி வாய்ப்பு அறிக்கைக்கு இறுதி அறிக்கை தாக்கல் செய்யும் வரை எதிரி பதில் எதுவும் கொடுக்கவில்லை. அதற்கான கட்டாயம் எதிரிக்கு இல்லை என்றால் சரியல்ல.

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.